உளி-1 | ஓசை-57 | டிசம்பர்-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

அமுதா தமிழ்நாடன் - 4
சரண்யாசத்தியநாராயணன் - 5
ராஜ் சௌந்தர் - 6
ஆனந்தகுமார் - 6
மு.முபாரக் - 7
ஆயிஷா பாத்திமா - 8
ஷப்ரா இல்முத்தீன் - 8
தஞ்சை, திராவிடமணி - 9
பால்ராஜ் மாரியப்பன் - 10
அலர்மேல்மங்கை - 11
ப்ரியா பாஸ்கரன் - 12
துளசி வேந்தன் - 13
குமரன்விஜி - 14
போஸ் பிரபு - 15
பிரபுசங்கர் க - 15
பிருந்தா சாரதி - 16
தி.கலையரசி - 17
அன்பூ - 18
காயத்ரி ராஜசேகர் - 19
ரிஸ்கா முக்தார் - 20
ரா.ராஜசேகர் - 21
ப.தனஞ்ஜெயன் - 22
தீபிகா நடராஜன் - 22
கவி. கோ. பிரியதர்ஷினி - 23
நித்யா சபரி - 23
தமிழ் தம்பி - 24
கோ.ஸ்ரீதரன் - 25
அழ. இரஜினிகாந்தன் - 26
தனபால் பவானி - 26
மா.காளிதாஸ் - 27
சுயம்பு - 28
நயினார் - 29
செந்தாரப்பட்டி இரா.செல்வக்குமார் - 30
செ.புனிதஜோதி - 30
ரிஷி பாரதி - 31
சேனை தமிழன் - 31
மகேஷ் சிபி - 32
ஜோதி சரண் - 32
முகமது பாட்சா - 33
கா. ரஹ்மத்துல்லாஹ் - 33
த. ரவீந்திரன் - 34
வீரசோழன்.க.சோ. திருமாவளவன் - 34
சௌவி - 35
ச.ஜெய் - 36
வீரமணி - 37
தங்கேஸ் - 37
திவ்யா ஈசன் - 38
சிபானா அஸீம் - 39



அந்த
பித்தளைப் பூண் போட்ட
மரப்பொட்டியை
அம்மா
தரை இறக்கும்போதெல்லாம்
ஓடோடிசென்று
உடன்
அமர்ந்து கொள்வேன்,

மேல் மூடியைத்
திறக்கும் நொடி
உள்ளிருந்துவரும்
அந்துருண்டையின்
வாடை அந்த வயதில்
ஏனோ
நாசிக்கு ஏதுவாகத்தான்
இருந்தது...

உள்ளிருக்கும்
ஒவ்வொரு பொருளுக்கும்
சொல்லப்படும்
பின் கதைச் சுருக்கத்தில்
அம்மா
ஒளிர்ந்தும் மிளிர்ந்தும்
ஒவ்வொரு முறையும்
உயிர்பெறுவாள்

அலுமினியக் கும்பாவில்
எண்ணெய் இறங்கிக்
கிடக்கும் எட்டுக்கல் பேசரியை
ஆறாப்பு படிக்கும்போதே
அணிந்துகொண்டாதாய்
பெருமை பீத்துவாள்.

மழையும்
மண்சுவரும் தின்றது போக
மீந்திருந்த புகைப்படத்தில்
இறுக்கிக் கட்டிய
பாவாடையின் நாடா
முட்டி வரை தொங்கியதை
அப்போதைய ட்ரெண்ட்ன்பாள்

சடங்கான போது
தாய்மாமன் சீராய் வந்த
மஞ்சளும் சிவப்புமான
சின்னாளப்பட்டிப் புடவையைக்
காட்டும் ஒவ்வொரு முறையும்
அம்மாவின்
கடைக்கோடி விழியில்
காமமற்ற காதல்
ஒரு
நொடி துளிர்த்தடங்கும்...

என்
அப்பனைக் கட்டியறுத்தத்
தாலிக்குண்டுகளோடு
தாய் வீட்டு சீதனத்தோடு
கொண்டுவந்த
கால்ப்படி கனவுகளும்
அரைப்படி ஆசைகளும்
மூச்சுமுட்டிக்கிடப்பதை
மட்டும்
அவளும் காட்டவில்லை
நானும் கேட்கவில்லை

அழுதா தமிழ்நாடன்



ஓர் மழையில் குடைக்குள் நான்..
தலைக்கு மேல் விரிந்த
அக்குடையினை பிடித்துக்கொண்டு
நடக்க மிகவும் சிரமமாகயிருந்தது..
வலது இடதுயென இரு கைகளிலும்
அக்குடையினை
மாற்றி மாற்றி பிடித்துக்கொண்டே நடந்தேன்..
காற்றும் கூட சில சமயம்
சிரமம் கொடுக்க
தன் கையினை உதறி ஓட நினைக்கும்
குழந்தையை தாய்
இழுத்து பிடித்து நடப்பதை போல் அக்குடையை
பிடித்து நடந்தேன்..
வீதியில் என் எதிர்படும் முகங்களை
மறைக்கும் அக்குடை
என்னையும் மற்றவர்களிடம் அறிமுகப்படுத்த
மறுத்தது..
இதில் குடையின் தலையில்
கொட்டும் மழையின் இரைச்சல் வேறு..
வீடு வந்ததும் கேட்டார்கள்..
" மழையில் மாட்டிக்கொண்டாயா"
வீட்டை விட்டு கிளம்பும் பொழுது வலியவந்து குடை
தந்தவர்களிடம்
சொல்ல முடியவில்லை
குடையில் மாட்டிக்கொண்டேனென்று..!

★ சரண்யாசத்தியநாராயணன்



முன்னே ஓடும் திரைப்படத்தில்
ஒரு கண்ணை மூட
பாதிக் காட்சி மறைகிறது
மறு கண்ணையும் சேர்த்து மூட
முழு திரைப்படமும் மறைகிறது
மாறாக
கருப்புத்திரையில் தொடர்கிறது
சில வண்ணகளோடு
புதிதாய் ஒரு திரைப்படம்
அதில்
பார்க்காத வண்ணங்கள் இருப்பதாகக் கூறி
இரு கண்களையும் திறந்து தேடுகிறது
மனம்
பார்க்கும் வண்ணங்களில் எல்லாம்

★ ராஜ் சௌந்தர்

[மனதை ஒருமுகபடுத்துகிறேன்
சம்மணமிட்டு அமர்கிறேன்..
மூச்சு பயிற்சி செய்கிறேன்
ஆசனங்கள் செய்து பார்க்கிறேன்
கண்கள் மூடி புருவமத்தியில்
கவனம் செலுத்தி எண்ண சிதறல்
தவிர்க்கிறேன்..
புத்தனாகிவிட ஆசைப்படுகிறேன்
விடவில்லை ஆசை..

★ ஆனந்தகுமார்



நான் எழுத நினைத்ததை
யாரோ ஒருவன்
எழுதிமுடித்திருந்தான்,
நான் பேச நினைத்ததை
யாரோ ஒருவன்
பேசிமுடித்திருந்தான்,
நான் படிக்க நினைத்த
கவிதையொன்றை
யாரோ ஒருவன் எனக்கு முன்பே படித்திருந்தான்,
நான் தொடவிருந்த சிகரத்தை
யாரோ ஒருவன்
தொட்டிருந்தான்,
நான் ஒருவருக்கு செய்ய நினைத்திருந்த உதவியை
யாரோ ஒருவன் செய்திருந்தான்,
நான் வாங்க நினைத்திருந்த
ஆடையை
யாரோ ஒருவன் அணிந்திருந்தான்,
நான் தொலைத்தவொன்றை
யாரோ ஒருவன்
எனக்கு முன்பே தொலைத்திருந்தான்,
நான் வாழ நினைத்த
வாழ்க்கையினை
யாரோ ஒருவன் எனக்கு முன்
வாழ்ந்துகொண்டிருக்கிறான்,
யாரோ ஒருவன் இருக்கிறான்
இவ்வுலகில்,
நமக்கு பிடித்த வாழ்க்கையை
நாம் அறியாத நேரத்தில் வாழ்ந்திட!

★ மு.முபாறக்



மயானத்தின் மரநிழல்களில் அமர்ந்திருந்த அந்த நாட்களில் மட்டும்தான் உன் இதயம் அதிகமாய் கனவுகளுக்குள் நுழைந்து கொண்டது

என் சுவர்களில் நான் வரைந்த வண்ணாத்திகள் பறந்து உன் தோள்களில் அமர்ந்த போதுதான் உன் இதயம் அதிகம் சிரித்துக் கொண்டது

உன்னைத் தேடித்தேடியே என் சுவரின் வண்ணாத்திகளும் வழிதவறிப் பயணப்பட்டு களைத்துக்கிடக்கிறது

ஒருமுறையேனும் வரையப்பட்டிருக்கும் வண்ணாத்திகளிடம் வந்து சொல்லிவிட்டுச் செல் நான் இனி என் இதயத்தை சிரிக்க வைப்பதாயில்லை எனும் உண்மையினை

எனதானே தேடல்களுக்குள் நான் நீண்ட தூரம் தொலைந்து விட்டேன் என்று...

★ ஆயிஷா பாத்திமா

சிக்கித் தவிக்கும்
நினைவுகளுக்குள்ளே
சிதைந்து போகிறது மனது..

சொட்டுச் சொட்டாய்
வடியும் நீர்த் துளியென
சில நினைவுகள் ஆங்காங்கே
மின்னலாய் வெட்டி மறைந்திட
அப்படியே ஸ்தம்பித்து
நிற்கின்றேன் நான்
ஒரு மூலையில் மெல்லமாய்

நினைவுகளுக்குள் தேங்கி விடலின்
பெரும் சுகத்துடன் சிற்சில
சோகங்களையும் அனுபவித்திட..

★ ஷப்ரா இஸ்முத்தீன்



நட்சத்திரங்களோடு
இதயமும் துடித்துக்கொண்டிருக்கும்
இப் பின்னிரவில்
வலி உச்சம் தொடுகிறது

ஒவ்வொரு முறையும்
அசைத்து
உறக்கம் கலைக்கும் விரல்கள்
துண்டிக்கப்படவில்லை
ஒரு வேளை
மரத்துப்போயிருக்கலாம்

நம்மைக் கேட்டு என்ன நடக்கிறது
இதோ
பொழுது புலர்ந்துவிட்டது

ஒவ்வொரு பகலையும் கலைத்துப்போட்டு
ஒழுங்கு செய்துவிட ஆசை
முயன்முன்று
தோற்றுப்போவது
நாய் தன் வால் பிடித்த கதைதான்

இறுக்கம் தளர்த்த
ஒரு பூ
சிறு புள்
மழலையின் சிரிப்பு
போதுமானதுதான்

நிறமற்ற பொழுதுகளைக் கடக்கும்
வெற்றுக்கண்களுக்கு
என்ன மாற்றம் நிகழ்ந்துவிடப் போகிறது

மனவெளி
பனிமூடிய நிலம்
விதைப்பு பற்றி இப்போது யோசனை இல்லை.

தஞ்சை, திராவிடமணி



நேர காலமின்றி
எனக்கு பிடித்த – ஜன்னலோர
பேருந்து பயணத்தில்
மங்கிய சிவப்பு வண்ண சேலையுடுத்தி
முன்னறிமுகமற்ற பெண்ணொருத்தியின்
கேசத்திலிருந்து வரும் வாசனை திரவியத்திலும்
நீ உபயோகப்படுத்தும் சீயக்காயின் வாசத்தையும்,
அவளுடலில் உன்மஞ்சள் மேனியின்
ஸ்பரிசத்தையும்
நுகர்கையில் அகன்ற நாற்புறச்சாலையில்
வாகனங்களின் இரைச்சலிருந்தும் நிசப்தமாயிருக்க
மனம் சீறின்றி
இயல்புநிலையற்று அமர்ந்திருந்தேன்
கண்ணையே நினைத்துக் கொண்டு

எல்லையில்லா இவ்வையகத்தில்
கவிதை எழுத கரு பொருள்
கோடிகளிருப்பினும் இதுவரை
நான் பார்த்திராத, எவரும் அறிந்திராத
விந்தையான உன் கண் பற்றியே
சிந்தையிலெழுதுகிறேன்

வைகைறைப் பொழுதிலும்
மசிமப் பொழுதிலும்
அந்தகாரத்திலும், யாமத்திலும்
யாசகனாய் உன்னால் நான்

★ பால்ராஜ் மாரியப்பன்



ஏதாவது ஒரு
சோகக்காட்சிக்கு
கைக்குட்டையை
கண்ணீரில் நனைத்துக்
கொண்டிருப்பேன்...

எப்போதோ இறந்த
செல்ல நாய்க்குட்டியின்
முகத்தை அலைபேசியில்
காணுகையில்
மீண்டும் நெஞ்சு தேம்பிக்
கொண்டிருப்பேன்...

அழுவதில் எனக்கொன்றும்
நிபந்தனைகள் கிடையாது
அது சட்டென கட்டவிழ்ந்து
விடுகிறது
நான் என் செய்வேன்?

அதற்காக நான்
கருணைகளை எதிர்பார்ப்பதில்லை
துடைத்து விட கரங்களைக்கூட
வேண்டுவதில்லை
என் ஆறுதலெல்லாம்
"என்னைக் கொஞ்சம் அழ விடுங்களேன்"
என்பதை மட்டும் தான்...

அழுவதற்கெல்லாமா
நியாயம் கற்பிக்க வேண்டும்?
அனுமதி பெற வேண்டும்?
கண்ணீர் சிந்தக்கூட
சுதந்திரமற்ற இவ்வாழ்வை
நினைத்து மீண்டும்
அழத்தயாராகிறேன்
கதவடைத்துக்கொண்டு...

அலர்மேல்மங்கை

# வியர்வைக் குஞ்சுகள்



உணர்வுகளோடு ஊடி
விடுப்பெடுக்க நினைக்கிறது
சோம்பேறி மனது

திடீரென பணி நிமித்தப் பயணம்
முதியோர் விடுதி நோக்கி

விடுதியெங்கும் மருந்து நெடி
மறதியுடன் உறவுகொண்டு
முனகல்கள்
இடையிடையே வீர முழக்கங்கள்

ஒரு படுக்கையில்
நிணமும் சதையுமற்ற
நினைவிழந்தப் பிணியாளி

மறு கட்டிலில்
உறவுகளின் புறக்கணிப்பையும்
துருவேறிய நினைவுகளையும்
தலையணையாக்கிச் சாய்ந்தபடி
நினைந்து புலம்புகின்ற
நெஞ்சமொன்று

அப்பால்
பைன் மரத்தின் ஊசி இலைகளாய்
எலும்புகள் தோள் கிழித்துச்
சீழொழுக மற்றொன்று

கண்ணீர்த் ததும்பிட
வெளியேறி ஓடுகிறேன் மூச்சிரைக்க

உதிர்ந்து கிடக்கின்றன
கட்டாந் தரையெங்கும் சோம்பல்
வியர்வைக் குஞ்சுகளாய்.

★ ப்ரியா பாஸ்கரன்



கடைசி வரை
அத்தனை காக்கைகளுக்கும்
உணவு வைத்த அம்மா,

இன்று
ஒரே ஒரு காக்கையாய் வர
சாத்தியமே இல்லை,

அதனால்தான்,
அம்மாவுக்கு படைத்து
வைத்தால் மட்டும்,
கூட்டம் கூட்டமாய் வந்து
கொத்திப்போகின்றன
காக்கைகள்,

கடைசியாய் வந்து
காலி இலையை
ஏக்கமாய் வெறித்துப்போகிற
அணிலொன்று,
அடிக்கடி கைநீட்டிய
அப்பாவாகக்கூட இருக்கலாம்.

★ துளசி வேந்தன்

# தேவதை நிழல்



அதிகாலை நிமிர்ந்த நிழலொன்று
தேநீர் சுடும்

தேநீரிலிருந்து
கிளம்பும் ஆவிக்கு
வீடு ஒரு கோவில்

அறைக்குள் கனவுதிர்த்த ஈசல் இறகுகளை
நிழல் கூட்டிப் பெருக்கித் தள்ளும்

சற்றுமுன்
எழுந்துவிட்ட நீங்கள் பிறப்பிலே
ஆண் கடவுள்கள்
கட்டளை போட கெட்டிக்காரர்கள்

கையில் ஏதேனும் சுட்டுக்கொள்ளும்
நிழல்
உங்களை கைவிட்டுவிடுவதில்லை

ஒரு மூன்றுமணி நேரம்
நிழலுக்கு ஒரே பரபரப்பு
நிற்க நேரமில்லை

சமையல் முடித்து
கிளம்பும் நிழல் பேருந்து பிடித்து
அமர்ந்தால்
ஆலையில் போய் குனிகிறது
நிமிர முடியவில்லை

ஆதவன் தினமும் உதிக்கிறான்.

★ குமரன்விஜி



மரவட்டை மனம் யார் தீண்டினாலும்
சுருண்டு கொள்கிறது
புரண்டு படுக்க முடியவில்லை
முதுகில் துரோகத்தின் கத்திகள்
கடவுள் நம்பிக்கையில்லை அழுதாலும்
மகிழ்ந்தாலும்
காதலித்தேன் காதலிக்கப்பட்டதில்லை
உங்களை ஒன்றும் சொல்வதற்கில்லை
என் கவிதை
எனக்கே பிடிக்காது
சில சமயம்

★ போரேஸ் பிரபு

இன்னாரது மனைவி
இந்த சகோதரர்களின் தாய்
இறந்து விட்டாரென
ஊரை சுற்றி நான்கைந்து இடங்களில்
சுவரொட்டி ஒட்டியிருக்கிறார்கள்
மறைந்து போனவர்
அந்த சுவரொட்டியில்
சிரித்து கொண்டிருக்கிறார்
கடைசி சில நாட்களாக
நோய்வாய்ப்பட்டு பட்ட கஷ்டங்களை எல்லாம்
அந்த சிரிப்பு பின்னுக்கு தள்ளிவிடுகின்றது
இரவு பகலாக தாயின் உடனிருந்து
கவனித்து கொண்ட மகள்
இப்போதும் தாயின் உடலருகே
அமர்ந்து அழுது கொண்டிருக்க
மகள் பெயரை சொல்லி
நான் அவளின் அம்மாவென
சொர்க்கத்தில் தன் பெயரை
புதுப்பித்து கொள்கிறது
இறந்தவரின் ஆன்மா.......

★ பிரபுசங்கர் க

# காணாமல் போனவர்கள் பற்றிய அறிவிப்பு



நினைவிலிருந்து நழுவி ஓடிவிட்ட கவிதைகளே...

எங்கு இருக்கிறீர்கள் இப்போது?

நலமுடன் இருக்கிறீர்களா?

எங்கிருந்து பெறுகிறீர்கள்
இவ்வளவு கவர்ச்சியை ?
எழுதிய கவிதைகளை விடவும் அதிகமாக.... ம்...

நீங்கள் வசிக்குமிடம் எது?

காணாமல் போகும் அனைவரும் ஒரே இடத்தில்
இருப்பீர்களா?
ஆளுக்கொரு திசையில் திரிவீர்களா?

மந்தையில் இருக்கும் ஆடுகளை மறந்துவிட்டு
காணாமல் போன
ஆட்டைத் தேடி அலையும்
இடையனாகிவிட்டேன்
இப்போது.

நானாக உங்களைக் கண்டுபிடிக்கும்
திறன் பெறுவேனா
தெரியவில்லை...
நீங்களாகவே வந்து
என்னிடம் சேர்த்துவிடுங்கள்.

இன்னொரு முறை உங்களைத் தொலைக்க
மாட்டேன் நிச்சயமாக கவனித்துக்கொள்வேன்
கண்ணும் கருத்துமாக.

குழந்தையைத் தொலைத்துவிட்ட
தாய் மனதின் அல்லல் புரியுமல்லவா உங்களுக்கு?

காணாமல் போவதால்
நீங்கள் இல்லாமல் போவதாகுமா?
வாழ்கிறீர்கள்
கருவில் கலைந்த குழந்தை
தாயின் நினைவில் வாழ்வதைப் போல.

திடுமென விழித்து அவள் வயிற்றைத் தடவிக்
கொள்வதைப்போல
நானும் விழித்தெழுந்து என் நினைவைத்
கிளறுகிறேன்
சிலநேரம்.

உங்கள் சொந்த வீட்டுக்கு வந்துவிடுங்கள்
என் செல்வங்களே.

இங்கிருந்து போனால்தான்
போன இடத்திலும்
தலை நிமிர்ந்து வாழ முடியும்.

நீண்டநாள் தலைமறைவாகவே
வாழ முடியாது.

நிம்மதியாகக்
கண்ணயர முடியாது
ஒரு நாளேனும்...
நானும்தான்.

பிருந்தா சாரதி



நீ காதல் கற்றுக்கொடுக்கிறாய்.
காணிக்கையாக
கவிதைகள் தருகிறேன்
நான்.
***
எனக்கு நாத்திகம்
பிடிப்பதில்லை.
நான் காதலை வணங்கிக் கொண்டிருக்கிறேன்.
***
உனக்கும் எனக்கும்
எத்தனையோ முரண்கள்.
அனைத்தையும் இணைத்து
கஸல் செய்கிறது
காலம்.
***
வெட்கத்திடம்
காதலை மறைக்கச் சொல்கிறேன்.
ஆனால்
அது காட்டிக் கொடுக்கிறது.
***
நீ பிரிவினைவாதி.
என்னை என்னிடமிருந்து
பிரித்து விடுகிறாய்.
***
என் ஓட்டைக்கூரை வழியே
விழும்
வெயில் நிலவு நீ.
உன்னை அள்ளிக் கொள்ள
முடிவதில்லை.
***
கவிதைகள் எழுதுவது தான்
உன்னை தரிசிப்பதற்கான
என் புனிதப் பயணம்.
***
உன் ஞாபகங்களில் நெளியும்
கூட்டுப்புழு நான்.
எப்போது சிறகுகள் தருவாய்
எனக்கு ?
***

தி.கலையரசி



எங்கப்பாவைத் தொடாத
தள்ளிப் படேன்
நெறுக்கியென்னை
தூரத் தள்ளுகிறது
பிள்ளை.

உனக்கும் முன்னே
எனக்கவர் புருசனாக்கும்
முகம் தூக்கி
முறைத்துக் கொள்கிறேன்
நானும்
சிறுபிள்ளையென.

அதெல்லாம் அப்போ
இப்போ எனக்கு மட்டுந்தான்
அப்பா
உங்கப்பாட்ட போய்க்கோயேன்
நொடித்துக் கொள்ளும்
பிள்ளையிடம்
நானெப்படி சொல்வேன்...

இப்படித்தான் நானுங்கூட
எனதப்பாவைப்
பங்கு வைத்த கதையை.

★ அன்பூ



பைக்கில் செல்லும்போது
ஒரு பக்கமாக அமர்ந்து
தோள்களை மட்டும்
பற்றிக் கொள்கிறாள்
பேசும்பொழுது எத்தனை கேட்டும்
ஒருமையில் விளிப்பதைத் தவிர்க்கிறாள்
அழைக்கையில் முழுப்பெயர் சொல்லுமாறு
வற்புறுத்துகிறாள்
சேர்ந்தமர்ந்து பாடல் கேட்கையில்
சட்டென்று கோர்த்த கை புறந்தள்ளி பாடலை
மாற்றுகிறாள்
விழிக்கையில் அவன் முகம் பார்க்க மறுத்து
விலகுகிறாள்
காலையில் தனக்கு காப்பி போடவே வேண்டாமென
முகம் சுளிக்கிறாள்
குளியலறைக் கண்ணாடியில்
ஆவியில் எழுதிவைப்பதைப்
புறக்கணிக்கிறாள்
படங்கள் பார்க்கையில்
தனி இருக்கையில்
அமர்ந்து கொள்கிறாள்
மழையில் என்றும்
குடையோடே திரிகிறாள்
மீள் நிகழ்வுகளில்
மனம் பதைக்கிறாள்
கால வளையத்தில்
முற்றும் சிதைகிறாள்
மறுமணம் புரிந்தவள்.

காயத்ரி ராஜசேகர்



இதெல்லாம் கடந்து விடுமெனத்தான் ஒவ்வொரு
முறையும் நினைக்கிறேன்
இதுதான் இறுதியெனத்தான்
ஒவ்வொரு இரவிலும் கண்ணீர் சிந்துகிறேன்
இதுபோல் இனி நிகழாதெனத்தான்
ஒவ்வொரு துயரத்தையும் கடக்கிறேன்

பின்னும்
பின்னும்

அதே துயரங்கள்
அதே வருத்தங்கள்
அதே முறிவுகள்
அதே உடைவுகள்

பகலெல்லாம்
ஏதோவொரு வைராக்கியத்தில்
ஒரு சொட்டுக் கண்ணீர்
வருவதில்லை

இருள் கவியும் போது
அவ்வளவு களைப்பாய்
இருக்கிறது
முகமூடிகள் களைந்து
நான்
விடியும்வரை
அழுது தீர்க்கிறேன்

ஏனென யாரும் கேட்காதிருங்கள்
வேண்டாமென யாரும் தடுக்காதிருங்கள்
போதும்

அதுபோலோர் ஆறுதல்
இப்போதைக்கு
வேறில்லை!!!

ரிஸ்கா முக்தார்

# தொலைந்த கவிதை



கூகுள் டாகுமெண்ட்
நோட்பேட் என
தேடிக்கொண்டே இருக்கிறேன்
சரளமாக வந்துவிழுந்த
சொற்களுடன் கூடிய
கவிதைகளை

ரயில் பற்றி
யானை பற்றி
கடல் பற்றி
இன்னும் என்னென்னவோ பிற பற்றியெல்லாம்

எல்லாம் கிடைத்தன

கிடைக்கவே இல்லை
ஒரே ஒரு கவிதை மட்டும்

கழிப்பறை வசதியின்றி
நீ காட்டுச் செடி மறைவு தேடிய
கண்ணீர் சேமித்த அது

உன்னிடம் கேட்டேன்
நீ சொன்னாய்:
உரையாடல் எப்படி கவிதையாகுமென

உயிர்
உரையாடலுக்கும் உண்டுதானே சிலவேளைகளில்

ரா.ராஜசேகர்



பரிணாமத்தாலும் எனக்குள்ளிருந்த
அழிக்கமுடியாத காடு ஒன்றை
சுமந்தே திரிகிறது உடல்
அனிச்சையாக என் உடைகளைக் களைந்தெறிகிறது
என் உணர்வுகள்
என் நினைவில் முளைத்துக்கொண்டேயிருக்கிறது
காடு

என்னை முதலில் சுமந்து கரைசேர்த்த மீன் மிருகம்
உடலில் நீந்திக்கொண்டேயிருக்கிறது
அந்த கணம் அவளும் களைந்தெறிந்த
ஆடைகளில் காடுகளின் வாசனை
பற்றிக்கொண்டு எரிந்து தீர்ந்துபோகிறது போகிறது
காடு

பரிணாமத்தால் கடத்தப்படாமலேயே விதைகள்
எரிந்து சாம்பலாய்
கெஞ்சுகிறது பச்சையத்தின் யாசகனாய்

தழைக்கிறது உலோக உடல்கள்.

★ ப.தனஞ்ஜெயன்

எல்லாருக்கும் கேட்கும்படி கைதட்டி
சண்டிகேஸ்வரனிடம்
பிராத்திக்கிறாள் ஒருத்தி!
யாருக்கும் கேட்காதபடி
நந்தியின் காதில்
குசுகுசுக்கிறாள் ஒருத்தி!
நெடுஞ்சாண் கிடையாய்
விழுந்து கும்பிடுகிறான் ஒருவன்!
அத்தனைக்கும் மத்தியில்
ஒன்றிரண்டு சில்லறை தந்தவனை
கடவுளாக்கி வாழ்த்துகிறாள்
பிச்சைக்காரி...

★ தீபிகா நடராஜன்



எனக்கு பேரன்பென்பது
ஒரு நாய் எலும்புத்துண்டை
கவ்வி ஓடுவது போலவும்
காற்றில் தலைமுடி
கலைந்து போவது போலவும்
மழைநீரில் நனைந்து
போவது போலவும்
எளிதானதல்ல
நூற்றாண்டின் படிமங்களாய்
எவரும் பார்த்திடா சூரியனின்
புறப்பகுதியாய் தொன்மங்கள்
தழுவிக் கிடக்கும் ஆழிப்பறவையது
அதன் சிறகுகளை நீவிவிடுவதற்க்கு
எனது ஆழியில் நுழைந்திடும் கைகள்
என் பேரன்பிற்குரியவை

★ கவி. கோ. பிரியதர்ஷினி

25)
உடைபட்ட முட்டைக்குள்ளிருந்து
ஒழுகிக்கொண்டிருக்கிறது
உயிரொன்று.....

★ நித்யா சபரி



***

தொடர் மழை
வீடு தேடி வருகின்றன
கம்மாய் மீன்கள்

***

சுழலும் மின்விசிறி
இறகு உடைந்து விழுகிறது
இரைதேடிய பறவை

***

உட் செவி
இரைச்சலாக இருக்கிறது
நுளம்பு பறக்க...

***

அனாதை இல்லங்கள்
ஆறுதல் தந்து கொண்டிருக்கும்
சிட்டுக்குருவிகள்

***

பூட்டிய வீடு
மெல்ல இடம் பெயர்ந்த படி
துவாரத்தில் வெளிச்சம்

***

போருக்குப் பின்னும்
போராடிக்கொண்டிருக்கும்
முள்வேலியில் சிறகு

***

அதிகாலைப் பனி
எழ முடியவில்லை
நுனிப்புல்...

***

ஆறிய குளம்பி
மிடறு மிடாறாகப் பருகுகின்றேன்
உதட்டுச் சாயம்

*****

எழுதும் கவிதை
ஏறிட்டுப் பார்ப்பதே இல்லை
முன்னாள் காதலி

தமிழ் தம்பி



எப்பவும்
காசிலே மட்டும்
கறாரயிருந்து
பூக்க வாய்ப்பில்லா
அத்தியாய்
சிரிப்பரியாத செட்டியார்
சிரித்தபடி சவமாயிருக்கிறார்.
எப்பவும் வா கண்ணு என
சிரித்தபடி வலம் வந்த
செட்டியம்மா கலங்கி
சரிந்து கிடக்கிறாள்.
எப்பவும் எலி பூனையென
முஷ்டி மடக்கி புஜபலம்
காட்டி மூக்குடைத்த
பெரிய அண்ணன்
சுகர் வந்து துவண்டிருக்கிறான்.
எப்பவுமே
குட்டியூண்டு பாவாடையணிந்து
அனுமனென தூது போன
மீனு நிறைமாதம்
கூடவே கைக்குழந்தை வேறு .
எப்பவும் என் வீடு பார்த்த
ஜன்னலின் அருகில் உலாத்தி
படிப்பு பாவனை தோதாய் பண்ண
என்னவள்
அப்பனின் பிணத்தை
கட்டிக்கொண்டழுகிறாள்
வயதுக்கு வந்த பெண் இழுத்து
ஆசுவாசப்படுத்திட.
எப்பவோ மூக்குடைந்த குருதி கண்டு
முற்றுப்பெற்ற என் காதல்
எப்பவும் இல்லாமல் இப்போது
இழவு வீட்டில் தலையெடுப்பானேன்....

கோ.ஶ்ரீதரன்



எந்தக் கிளையை
வெட்டி
எரியூட்டுவது.?
எல்லாமே
நான் –
நட்டது..!

★ அழ. இரஜினிகாந்தன்

மார்கழி மாதத்தின்
அதிகாலைக் குளிராய்
எங்கும் வியாபித்திருக்கிறாய் நீ

இழுத்து போர்த்திக்கொள்ளும்
கம்பளியாய்
ஆவி பறக்க பருகும்
தேநீரின் குடுவையாய்

பருவம் தப்பிப் பொழியும்
மெல்லிய மழையாய்
உரசிய கைகளுக்குள்
உண்டாகும் இளம்சூடாய்
இருப்பதும் நீயேதான்

நீளும் கனவிலும்
விடியத்தொடங்கும் இரவிலும்
இன்னும் மிச்சமிருக்கிறது உறக்கம்

நீ தராமலே போன
முத்தங்களைப்போல..!

★ தனபால் பவானி



நிறைந்த அரங்கில்
சொற்களைச் சேகரிப்பவர்களை விட
பலூன்களைச் சேகரிப்பவள்
அவ்வளவு சொற்களைக்
கொட்டிச் செல்கிறாள்.

பலூனைப் பிடித்துக் கொண்டு
எங்கெங்கோ பறக்கிறாள்.

பலூன்களில் நிரம்பிய சொற்கள்
காற்றைப் போல வெளியேறும் போது
ஏமாற்றத்தில் உப்பிப் பெருக்கின்றன
அவள் கன்னங்கள்.

சுருங்கச் சுருங்க
பலூனில் கட்டிவிடப்பட்ட நூலைப் போல
இளைக்கிறாள்.

அரங்கு முழுக்க
காற்றுப் போன பலூன்களைப் போல நிறைந்து
கிடக்கும்
அவளின் பாதச்சுவடுகளைச் சேகரிக்க இங்கும்
அங்குமாகத் திரிகிறாள்
இன்னொரு தேவதை.

தேர்ந்தெடுத்த சொற்களுக்காகத் தட்டப்பட்டு
ஒளிந்திருந்த கையொலிகள்
மீண்டும் உங்களுக்குக் கேட்கிறதா?

அவ்வளவுதான்
விழா இனிதே நிறைவுற்றது.

மா.காளிதாஸ்



ஒருமுறை
பாவாடை, தாவணியில் வா!
இலக்கியம் என்பது வேறு என்னவாக இருந்துவிடப் போகிறது

*

தமிழ் எழுத்துக்கள் எத்தனை என்று யாரேனும் கேட்டால்
உன் பெயரில் உள்ள எழுத்துக்களை
எண்ணிக் கொண்டிருக்கிறேன்

*

மழை நேரத்தில்
நீ ஊதி குடிக்கும் தேநீரிலிருந்து
சூடாக பறக்கிறது
என் ஆவி

*

எனக்கு சம்மதமில்லை
என் மரணமென்றாலும்
நீ அழுவதற்கு,,,

*

உன் கொலுசுகளை
கழற்றி வைத்து விட்டு தூங்கு
புரண்டு படுக்கும் போது
கேட்கும் சத்தத்தில்
இரவு விழித்துக் கொள்கிறது

*

உன்
அப்பா, அம்மாவிற்கு
கவிதை எழுத தெரியாதென்கிறாய்
வேறெப்படி
நீ மட்டும் கவிதையாய்,,,

சுயம்பு



மார்கழி குளிர்தான்
அதற்காக..
பூமிக்குமா அவள்
சுவட்டர் தைய்ப்பாள்.

*

ஒரு ஓவியம்
புவியில்..
கவிதை எழுதுவதை
ரசித்துப் பார்க்கிறது வானம்.

*

புள்ளிகளைத்தானே
சிறை வைத்தாள்
நான் எப்படி கைதியானேன்.

*

ஒவ்வொரும் நாளும்
வெவ்வேறு
கோலம் போடுகிறாள்
நான் மட்டும்
புள்ளியாகவே இருக்கிறேன்.

*

அசையாமல்தான் நிற்பார்கள்
அவள்..
வளைந்து நெளிந்து
கோலம் போடுவதுதான்
பலருக்கு தேசியம்கீதம்.

*

தனக்கு தொட்டு..
பொட்டு வைத்தாளாம்
தொடாமல்..
சேலை கட்டுகிறாளாம்
இப்படி எல்லாமா..
புலம்பும் இந்த பூமி.

*

யார் யாரோ
தூக்கி சுமந்தார்களாம்
இறுதியாக..
அவளின் இரண்டு விரல்களை
பிடித்துக்கொண்டே
தரை இறங்குகிறது கோலமாவு.

*

கோலத்தை
போட்டு முடித்துவிட்டு
நின்று அதை பார்ப்பாள்
அந்த கோலத்தை ரசிக்கவே
நான் காத்திருப்பேன்.

*

கோலம்..
எப்படி என்று கேட்கிறாள்
பாராட்ட வேண்டும்
கூப்பிடு உன் பெற்றோரை என்றேன்

நயினார்



எனக்கான தேவை
அனைத்தையும்
நானே தான் உழைத்து,
தோல்வியில் நசுக்கி
நாளும் முயற்சித்து
பெற வேண்டிய வாழ்வில்...
நீங்கள் பேசும்
கடவுள்
எந்த வகையில்
என்னைவிட பெரியவன்...

★ செந்தாரப்பட்டி இரா.செல்வக்குமாரி

தனிமையில் வசப்பட்ட
பறவை...
தனக்குள்ளே
ஒரு வனத்தை
வரைந்து கொண்டிருக்கும்..
இந்த ஓடமும்
தனக்கு தானே
மரத்தை வளர்த்துக்
கொண்டிருக்கும்
தனிமை
வனைக்க...
வடிக்க...
வளர்க்க...
சிறந்த
கூடாரம்
ஆதலால் காதல்
செய்கிறேன்
தனிமையை

★ செ.புனிதஜோதி

# புறம் கூறும் போதாமை...



அகமும் புறமும்
நாணேற்றி அறையும்
தோல் பறை நான்
அதிர்வதலை அன்றி
என் அடையாளமாய்
உங்களிடத்தில் – உள் நுழை
ஒலி ஒளி உணர்வென்று
எதை விட்டுச் செல்ல ....,

★ ரிஷி பாரதி

வறுமை வாழ்வு
கடும் வெயிலைப் பொருட்படுத்தவில்லை
வெற்றுக் கால்கள்

நூலறுந்த பட்டத்தைக்
கீழே விழாமல் பிடிக்கிறது
வீட்டின் கூரை

இளம் நாற்றுக்கள்
நடவுக்குக் காத்திருக்கின்றன
பண்படுத்தப்பட்ட வயல்கள்

மலைமுகட்டில்
மான்களில் அழகிய காட்சி
இயற்கை ஓவியம்

பௌர்ணமி நிலவு
வெளிச்சம் தருகிறது
தெருவிளக்கு

★ சேனை தமிழன்



என்றோவொரு நாள்
மீந்த சோறு
போட்டதை ஞாபகம் வைத்துக் கொண்டு
ஒவ்வொரு நாளும்
சாப்பிடும் நேரத்தில்
வாசற்படி அருகே வந்தமர்ந்து கொள்கிறது தெரு
நாய்
ஒரு நாள் குத்துக்காலிட்டு அமர்ந்திருக்கும்
இன்னொரு நாள்
நீட்டிய முன்னங்கால்களுக்கிடையே
தலையை வைத்து
படுத்துக் கிடக்கும்
கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டு
விழிப்படையும் நாய்
எழுந்து நின்று வாலாட்டுவதோடு சரி
வீட்டு நாயைப் போல்
உரிமையோடு
ஒருபோதும் சோறு கேட்பதில்லை
தினமும் ஏமாற்றம் கவ்வி
பழகிக்கொண்ட தெரு நாய்கள்
எதிர்பார்ப்பின் சலிப்புகளை பெரிதாய் காட்டிக்
கொள்வதில்லை
வீதியில் காத்திருக்கும் அதன் நம்பிக்கை
கதவடைத்ததும்
அமைதியாய் எழுந்து கொள்கிறது

மகேஷ் சிபி

நெருப்பு உமிழ்ந்த நாவின்பின்
நிறைந்து வழியும் பேரன்பு
தேன் தடவிய வார்த்தையின் அடியில்
விஷமென வஞ்சம்....

ஊரெல்லாம் கொண்டாடும்
புன்னகை சிந்தும் மோனலிசாவின்
கண்களை காந்தமென சிலாகித்து
ஒட்டிக்கொள்ள விரும்பும்
விசித்திர இரும்பு....

மேக வடிவமோ
தென்றல் வருடலோ
உதிர்ந்த பறவை இறகோ
எதோ ஓர் சமிக்ஞை வழி
கடத்தியின்றி இதயச்செவியில் இசைநிரப்பும்
பேரன்பு.....

சில முரண்கள்
சில அதிர்வுகள்
சில ஆச்சர்யங்களோடு
சில ஆசிர்வாதங்கள்
நெஞ்சக்கூட்டில்
நேச வாசம் பரப்பும்
வண்ண மலர்களென....

ஜோதி சரண்



முதல் வரிசையின் முதலிருக்கையில்
அவளிருந்தாள்,
ஆதர்ச நாயகனின் அட்டகாச வருகைக்கு
அனாவசியமாய் விசிலடித்தாள்,
மெய்யெழுத்துகளை மூடி மறைக்கத் தோணாமல்
மகிழ்ச்சிக் காட்டினாள்,
“ப்ளிச் , ப்ளிச்“ சப்தங்களால் எச்சிலைத் துப்பி
அழுக்குச் செய்தாள்,
வெற்றிலை ஒழுக்கையெல்லாம் கைகளால்
துடைத்துக் கொண்டாள்,
உறுப்புகளில் ஊடுருவியவனைக் கண்ணடித்து,
“த்தே, நல்லா பாத்துக்க !” என்றாள்,
“என்னடி இப்படிப் பண்றே?” என்ற கூட்டுக்காரியிடம்,
“எல்லாம் மரத்துப் போச்சி டி !
இங்க வந்தா அதுவும் மறந்து போச்சி டி!’
என்றாள்,
அவள் கண்களில் வழியாத உப்புக் கண்ணீரை
மனசுக்குள் வழியவிட்டு, அழகாக மறைத்துக்
கொண்டாள் !

★ முகமது பாட்சா

பாட்டியின் காலியான சுருக்குப்பை
முகர்ந்து பார்க்கிறேன்
பணத்தின் வாடையே இல்லை

★ கா. ரஹ்மத்துல்லாஹ்



மனைவியின் தாலியை அடமானம்
வைத்தேனும் ஒரு கவிதை நூல்
வெளியிட நினைக்கிறேன்.!

ஆனால்..!

அதற்கு முதலில் தங்கத்தில்
தாலி செய்யவேண்டுமென
அவ்வப்போது நினைவூட்டுகிறது
அவள் கழுத்தில் மஞ்சள்
பூசிய தாலி.!

அவளுக்கு தங்கத்தில்
தாலி கனவாக உள்ளது.!

எனக்கு கவிதை நூல்
வெளியீடு கனவாக உள்ளது.!

★ த. ரவீந்திரன்

குளம் நிறைந்து வழிய
ஓடை வழி
ஓடி வந்தது
நிலா.

★ வீரசோழன்.க.சோ. திருமாவளவன்



இரங்கல் செய்திகளில்
அச்சோ என்றவன்
இழவு வீட்டில் கண்ணீர் சிந்திவிட்டு
வெளியேறுகிறான்
எதிர்ப்படும் பால்யகாலத்து நண்பனுடனான
உரையாடலில்
தன்னைக் காதலித்தவளின்
கரம் பற்றிக்கொண்டு
அலைவீசும் கடலோரம் நடந்துபோகிறான்
வீட்டுக்கு வரும் வழியில்
தன் வாகனத்தின் மீது உரசியவனிடம்
கோபத்தை முகத்திலேற்றி சண்டையிட்டவன்
வீட்டுக்குள் நுழைகையில்
அப்பாவென ஓடி வந்து
கால்களைக் கட்டிக்கொள்ளும் மகளிடத்து
அவ்வளவு இலேசான புன்னகையாகிறான்
அலுவலகத்தில் மேலதிகாரிகளிடம்
பணிவாயிருந்தவன்
வீட்டில் மனைவியிடத்தும் குழந்தைகளிடத்தும்
சற்று நேரம் அதிகாரியாகிவிடுகிறான்
கடக்கும் வழியில்
கோவிலைக் கண்டதும்
கையெடுத்துக் கும்பிட்டபடி
பக்திமானானவன்
வழியில் அடிபட்டுக் கிடக்குமொருபவனைப்
பார்த்தபிறகும்
அலுவலகத்துக்கு நேரமாகிவிடுமென
கருணையற்றுச் சுயநலவாதியாகிறான்
அவதாரங்கள்
கடவுளுக்கு மட்டும் சொந்தமானதல்ல

★ சௌவி



பக்தி பாடல்கள் உள்ள
டேப் கேசட்டுகளை தான்
அப்பா
அப்போதெல்லாம்
அதிகம் வாங்கி வருவார்
சில சமயம் கதை வசன கேசட்டுகள்
கூட இடம் பெறும்
சபரிமலைக்கு செல்வதற்காக
விரதமிருந்தவர் பூஜை நேரத்தில்
பாடலை போட்டு விட்டு
கூடவே அவரும் பாடிக்கொண்டிருப்பார்
வண்ண வண்ணாய் இருந்த
அந்த கேசட்டுகள் இப்போது
அதே வண்ணங்களில் நினைவுகளாய் மட்டுமே
இருக்கின்றன
அப்போது ஒலித்த நிறைய
பாடல்கள் எனக்கு நெருக்கமாயிருக்கின்றன
அப்பாடல்களை கேட்டு பாட
அப்பா இல்லையென்றாலும்
இப்போது ஒலிக்கின்ற அவைகள்
அப்பாவை தான் பாடிக்கொண்டிருக்கின்றன...

ச.ஜெய்



கொய்வதற்கு
யாருமற்ற
வனத்திலும்
முட்களை
காவலுக்கு
வைத்துவிட்டே
மலர்கின்றன
சில பூக்கள்

★ வீரமணி

ஒரு பெருங் கனவு உடைந்து
சிறு சிறு குமிழ்களாகி
வெளியெங்கும் அலைகின்றன
இனி நீர்க்குமிழ்களைப் பார்த்தால்
நின்று விடுங்கள்
யார் யாரின்
உடைந்த கனவுகளோ
உங்களின் மீது மோதுபவை

★ தங்கேஸ்

# நாய் பிஸ்கட்



காட்டு நாய்கள் இரண்டுதான்
ஒன்று செந்நாய்
மற்றொன்று மரநாய்
முன்னது ஊன் உண்ணி
வேட்டையாடும் பழக்கமுடையது
பின்னது பழ உண்ணி
இராமேயும் பழக்கமுடையது
எனக்கு தெரியும்
அவைகளிடமிருந்து தப்புவதற்கு..

இன்று கல்வி நிமித்தம்
வனத்திலிருந்து தற்காலிகமாக வெளியேறி
கனத்த வீதிகளில் நடக்கிறேன்
நாட்டு நாய்கள் பலவிதமாம்
வீட்டு நாய் வாலாட்டுமாம்
தெரு நாய் குரைக்குமாம்
கோட்டி நாய் துரத்துமாம்
சொரி நாய் முரைக்குமாம்
வெறி நாய் கடிக்குமாம்
எனக்கு தெரியாது
அவைகளிடமிருந்து தப்புவதற்கு..

நாட்டு நாய்களுக்கு
நன்கு பழக்கப்பட்ட என்அறை தோழி
என்னை ஒரு தாயைப் போல் தேற்றினாள்
நாய்களைப் பார்த்து ஓடக்கூடாது என்றாள்
நாய் பிஸ்கட் குறித்து சொன்னாள்
அப்படிதான்
அவ்வப்போது சில நாய்களுக்கு
இரண்டு நாய் பிஸ்கட்களை வீசினேன்
இப்போது
நாட்டு நாய்களால் தொந்தரவில்லை..

நன்றி உணர்ச்சியில் திளைத்த சில நாய்கள்
சும்மாவே இருப்பதில்லை
ஒன்று கல்லூரி வாசலில் காத்துகிடக்கிறது
ஒன்று விடுதிவரை உடன் வருகிறது
ஒன்று ரோஸ்பூவுடன் அலைகிறது
ஒன்று புலன எண் கேட்கிறது
ஒன்று பேருந்து ஏறி மலையேற எத்தனிக்கிறது
ஒன்றிரண்டு காதலிப்பதாகவும் சொன்னது
ஒன்று
நாய் பிஸ்கட் போதும்
மாமிசம் வேண்டும் என்றது..

பெரும் பதட்டம் அடைந்த நான்
தோழியிடம் மீளவும் முறையிட்டேன்
என் கண்களையே உற்றுப்பார்த்தவள்
"நான் போட சொன்னது
சயனைடு தடவிய பிஸ்கட்களை
நீ போட்டது எல்லாமே
குளோரோபார்ம் தடவிய பிஸ்கட்கள்"
என்று முறுவலித்தாள்..
பின்பு
நாய்களுக்குள் சண்டை இழுத்துவிடுவது குறித்து
இருவரும் பேசிக்கொண்டோம்..

அதன் பின்பு
எனது ஆண்ட்ராய்டில்
காவலன் செயலியை பதிவிறக்கி
நாய்களால் பிரச்சனை என்றால்
நாய் பிடிக்கும் வண்டியை வரவழைக்கவும்
கற்றுத்தந்தாள்ஞ்

இப்படிதான் நான்
யானை, சிறுத்தை, கரடிகள் வாழும்
காட்டிலிருந்து கீழ் இறங்கி
நாய்கள் வாழும்
நாட்டில் வாழப் பழகிக்கொண்டேன்...

★ திவ்யா ஈசன்



அன்பின் சாலைகளில்
கைகோர்த்து செல்வதற்கு
முன்

நிற்க

சில நிபந்தனைகள் உண்டு

அவர்கள் சிரித்தால்
நீயும் சிரிக்க வேண்டும்

அவர்கள் அழுதால்
நீயும் அழவேண்டும்

அவர்கள் பரபரப்பாகவிருந்தால்
நீயும் அப்படியேதானிருக்க வேண்டும்

அவர்கள் அமைதியானால்
நீயும் அதையே பின்பற்றிக்கொள்

அவர்கள் உன்னைக்கொண்டாடினால்
மறுதலிக்காதே ஏற்றுக்கொள்

இத்தனைக்குப் பின்னும்
ஓர் நாளில் அவர்கள் பாதிவழியில்
கைவிட்டால் மலங்க மலங்க முழிக்காமல்
திரும்பிக்கொள்ள வேண்டும்

இவ்வளவுதானா?
அவ்வளவுதான்

அன்பின் அளவு மட்டங்கள்
மாறிக்கொள்ளும்

பேய் மழையும்
ஒரு கட்டத்தில் ஓய்ந்துவிடுவதில்லையா?

அதுபோல் தான்!

மயிலிறகு மனசு

சிபானா அஸீம்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு



சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..